# கர்ப்பத்தைக் கலைப்பது எப்படி?
# (அபார்ஷன்)

### அபார்ஷன்
### என்பது என்ன?
### எத்தனை வகை?

கர்ப்பச் சிதைவு, இதுதான் அபார்ஷன்!

அபார்ஷன் ஏற்பட்டால் வயிற்றில் உள்ள குழந்தை இறந்துவிட்டது என்று அர்த்தம். மீண்டும் அந்தக் குழந்தைக்கு உயிர்கொடுக்க எவராலும் முடியாது!

அபார்ஷன் என்பது அவ்வளவு எளிதானது அல்ல. பிள்ளையைப் பெறுவதைவிடக் கடினமானது. சில வேளைகளில் சிக்கலானது. சில வேளைகளில் ஆபத்தானது.

### 'அபார்ஷன்'
### என்றால்
### என்ன?

ஒரு பெண் கர்ப்பமாக இருந்து, அவளுடைய கர்ப்பப்பையில் வளர்ந்து வரும் கரு, முழுமையான குழந்தையாக வளர்ச்சி பெறுவதற்கு முன்பாகவே கர்ப்பம் கலைந்து, 'கருவுற்ற கரு' வெளியேறிவிடுவதைத் தான் 'நவீன மருத்துவத்தில்' அபார்ஷன் என்று சொல்கிறார்கள்.

ஒரு பெண் கருவுற்ற தினத்திலிருந்து 28 வாரங்கள் முடியும் போதுதான் கருத்தரித்த அந்த பெண்ணின் 'சினை முட்டை'

படிப்படியாக வளர்ச்சியடைந்து ஒரு முழுமையான குழந்தைக்குரிய அனைத்து உறுப்புக்களையும் பெறுகிறது. அந்த நேரத்தில் குழந்தையின் எடை 1000 சிராமிற்கும் அதாவது 1 கிலோவிற்கும் அதிகமாக இருக்கும்.

அபார்ஷனில் இரண்டு வகை இருக்கின்றன.

ஒன்று: இயற்கையாக அபார்ஷன் ஆவது. இது கர்ப்பமான ஒரு சில நாள்களில் ஆகலாம். ஒரு சில வாரங்களில் ஆகலாம். ஒரு சில மாதங்களில் ஆகலாம். வயிற்றில் இருக்கும் குழந்தை வளர்ந்த பிறகு அபார்ஷன் ஏற்படுவது ஆபத்து. வயிற்றில் இருக்கும் குழந்தை நன்றாக வளர்ந்த பிறகு அபார்ஷன் ஆனால் உடனே மருத்துவ விடுதியில் சேர்ந்து தகுந்த சிகிச்சை பெற வேண்டும். பெறாவிட்டால் அபார்ஷன் ஏற்பட்ட பெண்ணின் உயிருக்கு ஆபத்து!

மற்றொன்று: செயற்கையாக அபார்ஷன் செய்து கொள்வது. இது இயற்கையாக அபார்ஷன் ஏற்படுவதை விட ஆபத்தானது. செயற்கையாக அபார்ஷன் செய்வதை 'இன்ட்யூஸ்ட் அபார்ஷன்' (Induced Abortion) என்று சொல்லுகிறார்கள்.

செயற்கையாக அபார்ஷன் செய்வது என்பதுதான் அதிகம். இப்போது மட்டுமல்ல. எந்தக் காலத்திலுமே செயற்கை அபார்ஷன் அதிகமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. குழந்தை வேண்டாம் என்று எண்ணுகிற பெண்களும், கல்யாணமாகாமல் கர்ப்பமாகிவிட்ட பெண்களும், கற்பழிக்கப்பட்டுக் கர்ப்பமான பெண்களும்தாம் பெரும்பாலும் அபார்ஷன் செய்து கொள்கிறார்கள்.

அபார்ஷன் செய்வதை முதலிலேயே, அதாவது, ஆரம்பத்திலேயே, கர்ப்பமான ஒரு சில நாள்களிலேயே செய்து விட்டால் தொல்லை இல்லை. துன்பம் இல்லை. கவலை இல்லை. எளிதாக முடியும், எல்லாமே நன்றாக முடியும்!

விவரம் தெரிந்த டாக்டர்கள், அபார்ஷனை எளிதாக, எந்தக் கவலையும் படாத அளவுக்குச் சுலபமாக, முறைப்படி செய்கிறார்கள். அதிலே ஆபத்து இல்லை. விவரம் தெரியாத டாக்டர்களும்,

டாக்டர்களுக்குப் படிக்காமலே டாக்டர் பட்டம் போட்டுக் கொள்ளும் போலி டாக்டர்களும், நாட்டு வைத்தியர்களும், ஆபரேஷன் செய்தோ, வேறுவழியிலோ, வேறு வகையிலோ அபார்ஷன் செய்யும்போது அது ஆபத்து. பொதுவாகக் கண்டவர்களிடம் போய் அபார்ஷன் செய்து கொள்கிறவர்களில் பாதிப் பேர்கள்தாம் பிழைக்கிறார்கள்! இரகசியமாக, மலிவான செலவில், தகுதி இல்லாத கண்ட கண்ட டாக்டர்களிடமெல்லாம் போய் அபார்ஷன் செய்து கொள்ளவே கூடாது.

பொதுவாக,

தைரியமுள்ள பெண்கள் மட்டுமே அபார்ஷன் செய்து கொள்ள வேண்டும். தைரியம் இல்லாத பெண்கள் அபார்ஷன் செய்து கொள்ளவே கூடாது!

## 'அபார்ஷன்' நமது நாட்டில் எந்த அளவில் நடக்கிறது?

'அபார்ஷன்' என்பது உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. மேற்கூறியபடி இது இயற்கையாகவும் நிகழலாம். பலருக்கு செயற்கையாகவும் நடத்தப்படுகிறது.

இயற்கையாக நடக்கின்றபோது அவர்கள் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அல்லது ஏதாவது உதவிக்கு வேண்டி அருகிலுள்ள மருத்துவரையோ, அல்லது நர்சுகளையோ நாடி வருகிறார்கள். இவ்வாறு வருவதை அடிப்படையாகக் கொண்டு நமது நாட்டில், மற்றும் நமது தமிழகத்தில் எந்த அளவிற்கு 'அபார்ஷன்' நடைபெற்று வருகிறது என்பதை கணக்கிட்டு பார்க்க முடிகிறது. ஆனால், செயற்கையாக நடக்கும் 'அபார்ஷன்' கேஸ்கள் மருத்துவமனைக்கும் வருவதில்லை, அவர்கள் மருத்துவர்களை நாடியும் செல்வதில்லை. ஏனென்றால், இவர்களில் பலர் கர்ப்பத்தை மறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'கருக்கலைப்பு' செய்து 'அபார்ஷனை' அவர்களே உண்டுபண்ணுகிறார்கள்.

திருமணம் ஆகாத பெண் யாராவது வாலிபருடன் ஏற்பட்ட சிநேகிதத்தால், தொடர்பால் கர்ப்பமாகின்ற போது, அதனை 'அபார்ஷன்' செய்ய முனைகிறார். திருமணம் ஆன பிறகும் கூட சில பெண்கள் கணவன் வெளிநாட்டில் பல வருடங்கள் தங்கியிருக்கின்ற வேளையில் யாருடனாவது தொடர்பு ஏற்படுத்துகின்றபோது ஏற்படும் கர்ப்பத்தை கலைக்க முயன்று 'அபார்ஷன்' செய்கிறார்கள். மேலும் பலவந்தமாக கற்பழிக்கப்பட்ட பெண்களும் இந்த விஷயம் வெளியில் தெரியாமல் இருக்க வேண்டுமென்பதற்காக அபார்ஷன்' செய்கிறார்கள். இவ்வாறு, செயற்கையில் நடக்கும் பல்வேறு 'அபார்ஷன்' மறைக்கப்படுவதால் எவ்வளவு 'அபார்ஷன்' நமது நாட்டில் நடக்கிறது என்பதன் விபரம் முழுமையாக கிடைக்கவில்லை. இருந்தாலும், இது 10% முதல் 15% சதவீதம் நடைபெறுவதாக தெரிகிறது. நமது சென்னை அரசாங்க மருத்துவமனையின் கணக்குப்படி இது 11.3% சதவீதமாகக் கருதப்படுகிறது. ஆனால். உண்மை நிலவரம் இதைவிட அதிகம்.

## இயற்கையாகவே ஒரு பெண்ணிற்கு 'அபார்ஷன்' ஏற்படுவதற்கான காரணங்கள்:-

ஒரு பெண்ணிற்கு பல காரணங்களால் கர்ப்பம் கலைந்து 'அபார்ஷன்' ஏற்படலாம்.

'அபார்ஷனை' புரிந்து கொள்வது சற்று கடினமானதாகத்தான் இன்றும் இருந்து வருகிறது. ஏனெனில், இன்னும் பல பெண்களுக்கு எந்த நோய் இல்லாத போதும், அவர்கள் உடலை பரிசோதனை செய்தபோது எந்தவித பிற கோளாறுகள் இல்லாதபோதிலும் கூட அவர்களுக்கு அடிக்கடி 'அபார்ஷன்' ஏற்படுவது தெரிய வந்துள்ளது.

பெரும்பாலான 'அபார்ஷன்களுக்கு' வளரும் கரு, இடையிலேயே வளர்ச்சி குன்றி இறந்து விடுவதுதான் காரணமென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பலருக்கு கர்ப்பப்பை கோளாறுகள்

காரணமாக இருக்கின்றன. இன்னும் சிலருக்கு தந்தையின் கோளாறுகள் வளரும் கருவை பாதிப்பதுவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய காரணங்களை வைத்து ஒரு பெண்ணிற்கு 'கர்ப்பம்' கலைந்து 'அபார்ஷன்' ஏற்பட மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

## (1) வளரும் கருவின் கோளாறுகள்:- (FOETAL FACTORS)

பல்வேறு 'உள்நாட்டு பிரச்சனைகள்', 'உட்கட்சி பூசல்', என்று கூறுவதைப் போல, கருவின் உட்பகுதியிலேயே ஏற்படும் பல்வேறு கோளாறுகளின் காரணமாக கருத்தரித்த கருவானது சிதைந்து வெளியேறிவிடுகிறது.

'அபார்ஷன்' ஏற்படுவதில் 60% சதவீதத்திற்கும் மேலாக, ஆரம்ப மாதங்களில்ஏற்படும்'அபார்ஷன்'இந்தகருவின் கோளாறுகளினா லேயே ஏற்படுவதாக கண்டறிந்துள்ளார்கள். 'கர்ப்பம்' கலைந்து அது இரத்தத்துடனும், இதர கர்ப்பபையிலிருந்து வெளியாகும் கழிவு களுடனும்வெளிவரும். இதனை பரிசோதனை செய்து பார்த்துவிட்டே மருத்துவ அறிஞர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

தற்சமயம் நடத்திய பல்வேறு ஆராய்ச்சிகளின்படி கருத்தரித்த கருவானது கர்ப்பப்பைக்கு வருகின்றபோது, அது அங்கு தங்கி வளருவதற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை இல்லாதது 'கருச்சிதைவிற்கு' ஒரு முக்கிய காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சாதகமற்ற சூழ்நிலையே கருவிலும், அதன் உட்புறத்திலும் பல்வேறு கோளாறுகளை தோற்றுவிக்கவல்லது என்றும் கருதப்படுகிறது.

'கருத்தரித்த கருவானது' உடனடியாக கர்ப்பப்பைக்கு வரு கின்றபோது, கரு வளர்வதற்கேற்ற சூழ்நிலைக்கு மாறாத

கர்ப்பப்பையினால், கருச்சிதைவு அடையும். அதாவது, கருத்தரித்த கரு கர்ப்பப்பைக்கு வரும்போது அதன் வளர்ச்சிக்கு சாதகமான தட்பவெப்ப சீதோஷ்ண நிலை, மற்றும் ஆக்ஸிஜன் அங்கு இருப்பதில்லை/ கிடைப்பதில்லை. இதனால் அங்கு 'கருத்தரித்த கரு' வளர்ச்சி பெறுவதில்லை 'அபார்ஷன்' ஆகிவிடுகிறது.

**இனி வளரும் கருவினால் ஏற்படுகின்ற 'அபார்ஷனுக்கு' காரணமானவற்றைப் பார்க்கலாம்:-**

1. வளரும் கருவைச் சுற்றி சிறிய விரல் போன்ற அமைப்பு இருக்கும் (CHORIONIC VILLI) இவை தான் கருத்தரித்த கருவானது கர்ப்பப்பையில் பொருந்த உதவுகிறது. இந்த அமைப்பு சில சமயங்களில் தன் நிலையிலிருந்து மாறி இழைபோன்று மாறிவிடும். இதனால் 'கரு' கர்ப்பப்பையில் பொருந்த முடியும். சிலருக்கு இந்த பகுதியான 'முத்து கர்ப்பம்' என்று சொல்லப்படும் (HYDATIFORM MOLE) நோயாக மாறி விடும். இந்தப் பகுதி மட்டும் வளர்ச்சி அடைந்து அவை முத்து முத்தாக உருண்டை வடிவில் கொத்து கொத்தாக உண்டாகி கருவின் வளர்ச்சியை பாதித்து விடும். எனவே, இந்த காரணங்களினால் 'அபார்ஷன்' ஏற்படும்.

2. வளரும் கருவைச் சுற்றி ஏற்படும் இரத்தக் கசிவினால் கருவின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனாலும் 'அபார்ஷன்' ஏற்படலாம். இவர்களுக்கு வெளிப்புறமாக இரத்தப் போக்கு ஏற்படலாம். அப்போது வலி போன்ற தொந்தரவுகள் ஏற்படுவதில்லை.

3. சிலருக்கு பல்வேறு நோய்க் கிருமிகளின் தாக்குதலினால் வளரும் கருவிற்கு உணவளிக்கும் உறுப்பு (PLACENTA) நோயினால் பாதிக்கப்பட்டு 'அழற்சி' உண்டாகும். இதனாலும் கருச்சிதைவு ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்படலாம்.

4. முறையாக சிலருக்கு 'கரு' கருத்தரிக்காமல் போகலாம். இதனால், அது அதிக நேரம் தங்கி கருவை வளர்க்க முடியாமல் போய்விடுகிறது.

5. பெரும்பாலும் குழந்தைக்கு தேவையான உணவளிக்கும் உறுப்பு கர்ப்பப்பையின் மேற்பகுதியில் இருக்கும். சிலருக்கு இது கர்ப்பப்பையின் கீழிருக்குமானால், கர்ப்பப்பை விரிவடைகின்ற போது எளிதில் கருச்சிதைவு ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்பட்டு விடும். இந்த உறுப்பு இடம் மாறியதன் காரணமாக (PLACENTA-PRAEVIA) ஆரம்ப மாதங்களிலேயோ அல்லது நடுப்பகுதிகளிலேயோ கருச்சிதைவு ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்பட்டுவிடும். சிலருக்கு கருவில் ஒரு குழந்தை வளருவதற்குப் பதில் இரண்டு குழந்தைகள் உருவாகும் வண்ணம் கரு பிரிந்து வளரலாம். இதனாலும் கர்ப்பப்பை சிலருக்கு இதனைத் தாங்கிக் கொள்ளும் தன்மையில்லாமல் 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்படலாம். (TWIN PREGNANCY).

6. சிலருக்கு தண்ணீர்குட பையில் அதிக அளவு நீர் சேர்வதாலும் 'அபார்ஷன்' ஏற்படலாம். (HYDRAMNIOS).

7. குழந்தையின் 'தொப்புள் கொடி'யில் ஏற்படும் பல்வேறு மாறுதல்களின் காரணமாகவும் அது வளரும் கருவை பாதித்து 'அபார்ஷனை' ஏற்படுத்தும். (UMBILICAL CORD ABNORMALITIES).

## கருவுற்ற பெண்ணின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் இதர நோய்களினால் 'அபார்ஷன்' ஏற்படும்:- (MATERNAL REASONS)

கருவுற்ற காலத்தில் பெண்ணிற்கு பல்வேறு வகையான நோய்களின் பாதிப்பு ஏற்படலாம். இந்த நோய்களும், 'வளரும் கருவை' பாதித்து கருச்சிதைவை ஏற்படுத்தும். 'அபார்ஷனை' உண்டுபண்ணும்.

அ) பல்வேறு வகையான தொற்றுநோய்களினால் ஏற்படும் நோய்கள் கருவுற்ற பெண்ணைத்தாக்கி 'கருச்சிதைவு' ஏற்பட வழிவகை செய்யலாம்.

ஆ) கருவுற்ற பெண்ணிற்கு ஏற்படும் அதிக 'இரத்தக் கொதிப்பு'க்கு முறையாக சிகிச்சை செய்யாவிட்டால் அதுவும் கர்ப்பத்தை பாதிக்கலாம். இதனாலும் 'அபார்ஷன்' ஏற்படும்.

இ) இதே போலவே சில பெண்களுக்கு 'சர்க்கரை வியாதி' இருக்கும். இதற்கு முறையாக சிகிச்சை எடுத்துவர வேண்டும். அப்போது இவர்களது இரத்தத்திலுள்ள 'குளுக்கோஸின்' அளவு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். இல்லையென்றால் இரத்தத்தில் அதிக அளவு 'குளுக்கோஸின்' அளவு அதிகரிக்கும். அதுவும் இவர்கள் 'கர்ப்பமடைகின்றபோது' இவர்களது இரத்த 'குளுக்கோஸ்' சரிவர சீராக இருப்பதில்லை. இவை கண்டிப்பாக வளரும் கருவை பாதிக்கும். இவர்களுக்கு 'அபார்ஷன்' ஏற்பட வழி வகுக்கும்.

ஈ) சிலருக்கு உடலுறவினால் பரவக் கூடிய 'பாலின நோய்கள்', ஏற்படும். இவற்றின் நோய்க்கிருமிகள் 'பாலின பெண் உறுப்புகளில்' காணப்படும். இரத்தத்திலும் இவை அதிகமாக காணப்படும். இவை வளரும் சிசுவை பல வழிகளிலும் பாதிக்கும். இந்தப் பாலின நோய்களில் முக்கியமானது சிபீலீஸ்' (SYPHILIS) என்ற நோய். இது பல பெண்களுக்கு இருந்து அவர்களுக்கு கர்ப்பம் உண்டாகின்றபோது அது அவர்களின் 'கருச்சிதைவிற்கு' வழி வகுத்து 'அபார்ஷனை' ஏற்படுத்திவிடும்.

உ) சில பெண்களுக்கு 'சிறுநீரகம்' பாதிப்பு அடைந்திருக்கலாம். குறிப்பாக பல்வேறு தொற்றுநோய்களின் தாக்குதலினால் சிறுநீரகத்தின் உட்பகுதியில் 'அழற்சி' ஏற்பட்டு அது பாதிப்பு அடைந்திருக்கலாம். (PYELONEPHRITIS). இவ்வாறு அடைந்தவர்களுக்கும் எளிதில் 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' உண்டாகலாம்.

ஊ) சிலருக்கு பல்வேறு காரணங்களால் 'காய்ச்சல்' அதிகரிக்கலாம். இது சாதாரணக் காய்ச்சலாக இருந்தால் கூட 'கரு' அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. சிலருக்கு அளவுக்கு அதிகமான

'காய்ச்சலாக' அது இருக்கும். அதாவது சாதாரண உடலின் உஷ்ண நிலையான $98.4^{0}$ F என்ற நிலையிலிருந்து அது $104^{0}$ F என்ற அளவிற்கு அதிகரிக்கும் (HYPERPYREXIA) இது போன்ற காய்ச்சலை பெரும்பாலும் டைபாய்டு மற்றும் மலேரியா காய்ச்சல் தான் உண்டாக்குகின்றன. எனவே, இந்தக் காய்ச்சல் வந்தால் அதனை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அது கருச்சிதைவிற்கு வழிவகை செய்து 'அபார்ஷன்' ஏற்படுத்திவிடும்.

எ) சிலருக்கு பல்வேறு வகையான வைரஸ் மற்றும் பிற கிருமிகளின் தாக்குதலினால் 'அபார்ஷன்' ஏற்படலாம். குறிப்பாக பசுவின் பாலில் இருந்து பரவும் கிருமியான 'புரூசேல்லா' கிருமியினால் வருகின்ற நோயினால் கருச்சிதைவு' ஏற்படலாம். (BRUCELLOSIS).

சிலருக்கு 'ரூபல்லா' வைரஸின் பாதிப்பால் 'கருச்சிதைவு' ஏற்பட்டு அபார்ஷன் உண்டாகலாம். (RUBELLA). இது ஒரு வகை ஆர்.என்.எ.(R.N.A.VIRUS) வைரஸாகும். சிலருக்கு 'அபார்ஷன்' ஏற்படாமல் போனாலும் குழந்தை பிறக்கின்ற போது பல்வேறு பிறவிக் கோளாறுகளை (CONGENITAL RUBELLA) இந்த வைரஸ் ஏற்படுத்திவிடும்.

ஒரு செல் ஒட்டுண்ணியான 'டாக்ஸா பிளாஸ்மா கோண்டை'(TOXO PLASMA GONDII) என்ற கிருமியினாலும் 'அபார்ஷன்' ஏற்படலாம். கருவுற்றிருக்கும் நிலையில் ஏற்படும் விபத்துகளினாலும் 'அபார்ஷன்' ஏற்படலாம். கருவுற்ற பெண் படிகளிலிருந்து தவறி விழுவது, வாகனங்களில் இருந்து கீழே தவறி விழுவது, அடிவயிற்றில் 'அடி' படுவது, போன்ற பல காரணங்களினால் 'கருச்சிதைவு' அடைந்து 'அபார்ஷன்' ஏற்படலாம்.

ஐ) கருவுற்ற காலத்தில் பெண்கள் சிறுசிறு வீட்டு பணிகளை சமையல் வேலைகளை செய்யலாம். உணவை பரிமாறலாம். ஆனால், கருவுறாத பெண்களைப் போல எல்லா வேலைகளையும் இவர்கள் செய்ய முற்படுவது தவறு ஆகும். இதனால் ஆபத்து அதிகம். ஆனால், கருவுற்ற பெண்களில் பலர் ஓய்வெடுப்பதில்லை. ஓயாமல் உழைப்பதுடன் கடினமான வேலைகளையும் மேற்கொள்கின்றனர்.

துணி துவைப்பது, படியேறுவது, தண்ணீர் சுமப்பது, தண்ணீர் இறைப்பது, பாரம் தூக்குவது போன்ற கடினமான வேலைகளை செய்கின்றபோது எளிதாக 'கருச்சிதைந்து' இவர்களுக்கு 'அபார்ஷன்' ஏற்பட்டுவிடும்.

சிலர் கருவுற்ற காலத்தில் அதிக அளவு, கடினமான உடற்பயிற்சிகளை மேற்கொள்வார்கள். இதனால், கருச்சிதைவு ஏற்பட்டு 'அபார்ஷன்' உண்டாகும்.

ஒ)சிலர் கருவுற்றவுடன் அளவுக்கு அதிகமான அளவில் உடலுறவில் ஈடுபடுகின்றபோது அது கருச்சிதைவிற்கு காரண மாகிவிடும். அதுவும், கருவுற்ற ஆரம்ப மாதங்களில் இவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஓ) பலருக்கு ஏற்படும் மனப்பிரச்சனைகளின் காரணமாகவும், மனஅழுத்தம், சோர்வு, வாழ்வில் ஒரு பிடிப்பின்மை ஆகிய காரணங்களினாலும் கூட 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்படலாம்.

ஔ) பலருக்கு மனம் திடீரென பயப்படுவதால், அதிர்ச்சியை தாங்க முடியாமல் போவதால், மனம் பீதி அடைதல், அதிக உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் போதல், கோபப்படுதல், அதிக சோகத்திற்கோ/ மகிழ்ச்சிக்கோ ஆட்படுதல் போன்ற பல்வேறு உணர்ச்சிகளின் பாதிப்பால், மனம் பாதிப்படைந்து அது 'கருச்சிதைவை' ஏற்படுத்தலாம்.

**இனி கர்ப்பப்பையின்
காரணங்களினால்
மட்டும் ஏற்படுகின்ற
'கருச்சிதைவு' மற்றும்
'அபார்ஷனை' காணலாம்.
(UTERINE CAUSES):**

கர்ப்பப்பையானது சாதாரண நிலையில் 3.5 செமீ அளவிலிருந்து 5செ.மீ அளவு வரை இருக்கக் கூடியது இதன் உட்சுவர். மெல்லிய

சவ்வு போன்றிருக்கும். பிறகு, இதன் சதைப்பகுதி வெளிப்புற உறை ஆகிய பகுதிகள் இதிலிருக்கும். பொதுவாக, 'கர்ப்பப்பை' கருவுறுகின்ற காலத்தில் வளரும் கருவின் வளர்ச்சிக்கேற்ப விரிவடையும், வளரும். இதன் காரணமாகத்தான் வளரும் சிசுவை அதனால் தாங்க முடிகிறது. அப்போதுதான் கரு வளர்ச்சியடைந்து குழந்தையாக மாற முடியும்.

சில பெண்களுக்கு கர்ப்பப்பை சாதாரணமாக இருப்பதில்லை. பிறவியிலேயே அதில் பல கோளாறுகள்/ குறைபாடுகள் இருக்கலாம். இதன் காரணமாக அதனால் வளரும் கருவை தாங்க முடிவதில்லை. இதனால் 'கருச்சிதைவு' ஏற்படலாம்.

சாதாரணமாக கர்ப்பப்பை ஒரு அறையை உடையதாக இருக்கும். ஆனால் சில பிறவி கோளாறுகளில் சில பெண்களுக்கு 'இரண்டு அறைகள்' அமைந்திருக்கும். இந்த இரண்டு அறைகளாக பிரிக்க 'கர்ப்பப்பையில்' புதிய சுவர் ஒன்று உருவாகியிருக்கும்.

ஆ) சிலருக்கு கர்ப்பப்பையின் சதைப்பகுதியில் கட்டிகள் தோன்றும். இவை கர்ப்பப்பையின் உட்பகுதியில் நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் வளர்ந்திருந்தால் வளரும் கருவை பாதிக்கும். 'அபார்ஷனை' ஏற்படுத்தும். (FIBROID/ MYOMA-UTERUS).

இ) கர்ப்பப்பையின் உட்பகுதி சுவரானது மெல்லிய குழாய் வடிவ சுரப்பிகளையும், நீண்ட நூலிழை போன்ற அமைப்பைக் கொண்ட செல்களையும் உடையது. இவற்றில் ஏதாவது நோய்க் கிருமிகளின் தாக்குதல் ஏற்பட்டு 'அழற்சி' உண்டாகுமானால், (ENDOMETRITIS) கருச்சிதைவு ஏற்படலாம்.

ஈ) பெரும்பாலான பெண்களுக்கு 'கர்ப்பப்பை' முன்பக்கமாக சிறிது வளைந்திருக்கும். ஆனால், ஏதாவது காரணங்களினால் இது பின்பக்கமாக சரிந்திருக்குமாயின் (RETROVERSION-UTERUS) இதனால் 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்பட வழி உண்டு.

உ) சிலருக்கு 'கருப்பை'யில் அதாவது 'கரு' முட்டையை உற்பத்தி செய்கின்ற 'சினை முட்டைப்பை'யில் ஏதாவது

கோளாறுகள், புற்றுநோய் ஏற்பட்டாலும் 'கருச்சிதைந்து 'அபார்ஷன்' ஏற்படும்.

## 'ஹார்மோன்' கோளாறுகளினால் ஏற்படும் 'அபார்ஷன்' (HORMONAL REASONS)

பெண்களின் உடலில் உற்பத்தியாகின்ற ஹார்மோன்கள் அவர்களது பாலின வேறுபாட்டிற்கு மட்டும் உதவுவது கிடையாது. அவை அவர்களுக்கு ஏற்படுகின்ற மாதவிடாய், கர்ப்பம் போன்றவற்றிற்கும் காரணமானவை.

'கர்ப்பம்' ஏற்படுவதற்கு மட்டுமல்லாமல், அந்த 'கர்ப்பத்தை' காப்பதற்கும், பின்பு பிரசவமான பிறகு, பெண்களுக்கு பால் உற்பத்தியாவதற்கும், இந்த ஹார்மோன்கள் பெரிதும் உதவுகின்றன. இவ்வாறு ஹார்மோன் இல்லையென்றால் பெண்ணின் உடலில் நடைபெறும் பல்வேறு மாறுதல்களும் நடைபெறுவதில்லை.

எனவே, இந்த 'ஹார்மோன்களின்' அளவு ஒவ்வொரு காலக்கட்டத்திலும், குறிப்பிட்ட அளவு இருக்க வேண்டும். குறிப்பாக 'கர்ப்ப காலத்தில்' ஹார்மோன்களின் அளவு குறைபடுகின்றபோது, அல்லது அளவுக்குமீறி அதிகமாகின்ற போது 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' உண்டாகிவிடும். இவ்வாறு, 'கர்ப்ப காலத்தில்' கருவின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் 'ஹார்மோன்களில்' முக்கியமானது தைராக்ஸின்' என்ற ஹார்மோனாகும்.

## 'கர்ப்பப்பையின்' கீழ் வெளிப்பகுதி கோளாறுகளினால் ஏற்படும் 'அபார்ஷன்':- (CERVIX)

கர்ப்பம் தரித்தவுடன் வளரும் கருவின் வளர்ச்சிக்கு ஏற்ப 'கர்ப்பப்பை' விரிவடைந்து கொடுக்கும். அதாவது அதன் மேற்பகுதி!

அதே நேரத்தில் அதன் கீழ்ப்பகுதியானது நன்கு மூடி, வளரும் கருவின் எந்தப் பகுதியும் வெளியேறிவிடாது பாதுகாத்துக் கொள்ளும்.

ஆனால், சிலருக்கு பிறவியிலேயோ அல்லது பின்பு ஏற்படும் பல்வேறு நோய்களின் காரணமாகவோ இந்த கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியானது 'கர்ப்பம்' ஏற்பட்ட பிறகும்கூட நன்கு மூடிக் கொள்ளாமல் அதன் வாய் திறந்திருக்கும். இதன் காரணமாக, வளரும் கருவின் பகுதிகள் வெளியேறி, 'கருச்சிதைவு' ஏற்பட்டு 'அபார்ஷன்' ஏற்பட்டுவிடலாம்.

## வேறு பல காரணங்களினாலும் 'அபார்ஷன்' இயற்கையாகவே நிகழலாம்: (BLOOD INCOMPATIBILITY).

★ பல்வேறு 'விந்தணுவின்' கோளாறுகளின் காரணமாகவும் 'அபார்ஷன்' ஏற்படலாம்.

★ கருவுற்ற பெண்ணின் இரத்தமும், அவளுடைய கணவனின் இரத்தமும் வேறுபட்டிருந்தால் அதனாலும் ஒரு பெண்ணிற்கு 'அபார்ஷன்' ஏற்படலாம். அது எவ்வாறு என்று இனி பார்க்கலாம்.

'Rh' என்ற வகை 'இரத்த குரூப்' வகையினால் இது ஏற்படுகிறது.

கணவன் 'Rh' பாஸிட்டிவ் இரத்தத்தைப் பெற்றிருக்கும் போது மனைவி நெகடிவ் இரத்தத்தை கொண்டிருந்தால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தை 'Rh' பாஸிட்டிவாக பிறக்கலாம். இவ்வாறு 'Rh' பாஸிட்டிவாக 'கரு' பெண்ணின் கர்ப்பப் பையில் வளருகின்ற போது, அதற்கு எதிராக கருவுற்ற பெண்ணின் இரத்தத்தில் எதிர்ப்பு சக்தி உண்டாகி, 'எதிரணு பொருட்கள்' உற்பத்தியாகும். இவை குழந்தையாக வளர உள்ள கருவின் அமைப்பை பாதிக்கும். அதன் சிவப்பணுக்களுக்கு எதிராக இந்த 'எதிரணு பொருட்கள்' (ISO ANTIBODIES) வினைபுரிந்து சிசுவின் சிவப்பணுவை அழித்து கருச்சிதைவை உண்டு பண்ணும். (ERYTHROBLASTOSIS FOETALIS).

சிலருக்கு சி, மற்றும் 'O 'வகை இரத்த வகை வேறுபாடுகளின் காரணங்களினாலும் கருச்சிதைவு ஏற்படும்.

பொதுவாக,

இப்படியெல்லா ஏற்படும் அபார்ஷன்கள் குறைவு. அபார்ஷன் கேஸ்களை எடுத்துக்கொண்டால், பெரும்பாலும் செயற்கை முறைகளால் ஏற்படுகிற அபார்ஷன்களே அதிகம். மிக அதிகம்!

## கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் சாப்பிடக் கூடாது.

கர்ப்பமாக இருக்கும் பெண்கள் கண்டகண்ட மருந்துகளை யெல்லாம் சாப்பிடக் கூடாது. விளம்பரங்களில் வரும் மருந்துகளை யெல்லாம் வாங்கிச் சாப்பிடக் கூடாது. கண்டவர்கள் சொல்லும் மருந்துகளையெல்லாம் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் அபார்ஷன்! கர்ப்பமாக இருக்கும் பெண்கள், டாக்டர்கள் எழுதிக் கொடுக்கிற மருந்துகளைத் தவிர, கண்டிப்பாக வேறு எந்த மருந்துகளையும் மாத்திரைகளையும் சாப்பிடக் கூடாது.

மேலை நாட்டுப் பெண்களிலே பலபேர் தூக்க மாத்திரை இல்லாமல் இன்று தூங்குவதில்லை. மேலை நாடுகளில் பெரும் பாலான பெண்கள் இன்று தூக்க மாத்திரைக்கு அடிமையாகி இருக்கிறார்கள். இப்படித் தூக்க மாத்திரையை அந்தப் பெண்கள் விரும்பி அதிகமாகச் சாப்பிடுவதால் அபார்ஷன் ஏற்படுகிறது. காரணம், தூக்கமருந்தில் இருக்கும் நஞ்சு கர்ப்பப்பையில் இருக்கும் குழந்தையைக் கொன்றுவிடுகிறது. இதனால் தான் அங்கே மருந்துக் கடைகளில் எந்த மருந்து வேண்டும் என்றாலும் டாக்டரிடமிருந்து பிரிஸ்கிரிப்ஷன் கேட்கிறார்கள்!

உடலை அதிகம் பாதிக்காத மருந்துகள் சில இருக்கின்றனவே, அவைகளைச் சாப்பிடலாமா? கூடாது. அவைகளைச் சாப்பிட்டால் கூடச் சில வேளைகளில் அபார்ஷன் ஏற்படுகிறது. தலைவலி, உடம்பு

வலிக்குரிய சாதாரண மாத்திரைகளை அடிக்கடி சாப்பிடும் சில கர்ப்ப ஸ்திரீகளுக்குக் கூட அபார்ஷன் ஏற்படுகிறது என்கிறார்கள் டாக்டர்கள்!

சில பைத்தியக்காரப் பெண்கள் இருக்கிறார்கள். இவர்கள் கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் வாங்கி டாக்டரைக் கேட்காமல் அவைகளைச் சாப்பிட்டால் அபார்ஷன் ஆகிவிடும் என்று எண்ணிக் கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அபார்ஷன் ஆகிறதா? எல்லாருக்கும் இந்தக் கண்ட கண்ட மருந்துகளால் அபார்ஷன் ஆவதில்லை கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிடுவதால் அபார்ஷன் ஆகிவிட்டதைப் போல சில பெண்களுக்கு அடையாளங்கள் தோன்றும். ஆனால், சில நாள்களில் அந்த அறிகுறிகள், அந்த அடையாளங்கள் நின்றுவிடும். அதற்கப்புறமும் வயிற்றில் குழந்தை வளரும். வளர்ந்து கொண்டே இருக்கும். இந்தக் குழந்தை பிறந்த பிறகு பார்த்தால் அந்தக் குழந்தையின் உடம்பில் ஏதாவது கோளாறு இருக்கும். குறை இருக்கும். ஊனமுள்ள முடமான பிள்ளைகள் பிறப்பது சிலருக்கு இதனால்தான்!

ஆகையால் கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் சாப்பிட்டு எப்படியாவது தாங்களாகவே அபார்ஷன் செய்து கொண்டு விடலாம் என்று எண்ணுகிறவர்கள் ஆபத்தை அவர்களாகவே விலை கொடுத்து வாங்குகிறவர்கள் ஆகிறார்கள்!

## 'அபார்ஷன்' உண்டாகும்போது ஏற்படும் அறிகுறிகள்:-

'அபார்ஷன்' ஏற்படுகின்ற போது அதற்கென பல்வேறு அறிகுறிகளும் தோன்றுகின்றன. அவற்றை இனி தெரிந்து கொள்ளலாம்.

*1)* **வலி ஏற்படுதல்:-** பெரும்பாலும் 'கர்ப்பம்' ஏற்பட்ட ஆரம்ப காலக்கட்டத்தில் அடிவயிற்றிலோ அல்லது முதுகு மற்றும் இடுப்பு பகுதிகளில் வலி ஏற்பட வாய்ப்பு இல்லை. இவை

பெரும்பாலும் கர்ப்பம் முழுமையடைந்து பிரசவத்திற்கு முன்பு தான் தோன்றும். எனவே, 'கர்ப்பம்' ஏற்பட்ட ஆரம்ப காலத்திலேயே வயிற்றுப் பகுதிகளில் 'வலி' ஏற்பட்டால் அது 'அபார்ஷ'னாவதற்கான ஆரம்ப அறிகுறியாக அமையலாம். எனவே மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

*2) இரத்தப் போக்கு:-* கர்ப்பமடைந்தவுடன் 'தீட்டு' ஏற்படுவதில்லை. அதாவது இவர்களுக்கு மாதம், மாதம் வெளியேறும் இரத்தப்போக்கு, மாதவிடாய். இந்த நிலையில் கர்ப்பமடைந்த பெண்ணிற்கு 'தீட்டு' ஏற்படுமாயின், அது 'கருச்சிதைவிற்கான' காரணமாக இருக்கலாம். அதிலும், அடிவயிற்றுவலியுடன், இரத்தப் போக்கும் ஏற்படுமாயின் அது பெரும்பாலும் 'கருச்சிதைவு' ஏற்படத்தான் என்பது புலனாகும்.

பெரும்பாலும் இவ்வாறு ஏற்படும் 'கருச்சிதை'வினால், 'இரத்தப் போக்கு' பல நாள் நீடிக்கும். இதன் அளவு நாளுக்கு நாள் மாறுபடும். வலியும் அதிகரிக்கும். சிலருக்கு அதிகமான இரத்தப் போக்கினால் உடல் தளர்வடைந்து மயக்கம் உண்டாகலாம்.

*3) கர்ப்பப்பையின் கீழ்பகுதி விரிவடைதல்:* இவ்வாறு வலியும், இரத்தப்போக்கும் ஏற்பட்டவுடன், தானாகவே கர்ப்பப் பையின் கீழ்ப்பகுதியானது விரிவடைந்து கொள்ளும். ஏனென்றால், கருச்சிதைவின் காரணமாக கர்ப்பப்பை அதிகமாக சுருங்கி விரியத் துவங்கும். இதனால், மேலும் மேலும் கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியானது விரிவடையும்.

*4)கருவுற்ற கரு வெளியேற்றப்படுதல்:-* இவ்வாறு நோயாளிக்கு வலி ஏற்பட்டு இரத்தப் போக்கும் ஏற்பட்டபின்பு, கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியானது நன்கு விரிவடையும். இதன் காரணமாக கருவுற்ற கருவானது ஒரு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வெளியேறும் இரத்தத்துடன் வெளி வந்து விடும்.முதல் இரண்டு அறிகுறிகளை நோயாளி எளிதில் அறிந்து கொள்ளலாம். அடுத்த இரண்டு அறிகுறிகள் மருத்துவ பரிசோதனையின் போது தெரிய வரும்.

## கர்ப்பமாகாமல் உடலுறவு கொள்ளச் சில வழிகள்!

ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்வது என்பது இயற்கை. அவசியம். இது உடலின் தேவை உயிரின் தேவையும்கூட. இதிலே பிழை இல்லை. தவறு இல்லை.

உடலுறவு கொண்டால் கர்ப்பமாகிவிடுமே என்பதற்காக எல்லாரும் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு பிரம்மசரியத்தை அனுஷ்டிக்க முடியுமா? முடியாது. நடக்காது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொண்டுதான் ஆகவேண்டும்!

கர்ப்பமாகாதபடி உடலுறவு கொள்ளலாம். கர்ப்பம் தரிக்காமல் இருக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. எத்தனையோ தடுப்பு முறைகள் இருக்கின்றன.

விந்து யோனிக்குள் பாயாமல், விந்து வெளியாகும் நேரம் பார்த்து டபக்கென்று ஆண்குறியை வெளியே எடுத்து விடுவது ஒருமுறை. நிரோத் போன்ற இரப்பர் கருவியை ஆண்குறியிலே அணிந்துகொண்டு உடலுறவு கொள்வது ஒருமுறை. ஆண்களுக்குப் பதில் பெண்கள் தங்கள் கர்ப்பப்பையின் வாயை மூடிவிடும்படி பெண்குறியில் இரப்பர் கருவியை அணிந்து கொண்டு உடலுறவு கொள்வது ஒரு முறை. பெண், கர்ப்பத் தடை மாத்திரைகளைத் தொடர்ந்து, சாப்பிட்டுக் கொண்டே உடலுறவு கொள்வது ஒருமுறை. இவைகளில் ஏதாவது ஒரு முறையை ஒழுங்காகக் கடைப்பிடித்தாலும் போதும். கர்ப்பம் ஏற்படாது. அடிக்கடி உடலுறவு கொள்ளலாம். ஆனந்தமாக உடலுறவு கொள்ளலாம்!.

இந்த முறைகளை ஒழுங்காக முறையாகக் கடைப்பிடிக்காமல் ஏதோ ஒரு வெறியில், ஏதோ ஓர் அவசரத்தில், ஏதோ ஒருவகை உணர்ச்சியில் உடலுறவு கொள்ளும்போது தான் பெண் கர்ப்பமாகிவிடுகிறாள்!

ஆண்குறி யோனிக்குள் புகுந்து தாக்கும்போது கொஞ்ச நேரத்தில் உச்ச நிலை ஏற்படுகிறது. அப்படி உச்சநிலை ஏற்படும்போது

விந்து பாய்கிறது. பீறிட்டுப் பாய்கிறது. கர்ப்பப்பையில் பெண்களுக்கு உருவாகும் கருமுட்டை அந்நேரத்தில் உருவாகியிருக்குமானால், உடனே கர்ப்பம்! பெண்களுக்குக் கருமுட்டை என்பது மாதத்தில் ஒரு தடவை தான் ஏற்படுகிறது. இந்த முட்டை, கர்ப்பப்பைக்குள் வந்து சேர்ந்துவிட்டால் கர்ப்பப்பைக்குள்ளே இரண்டு நாள் வரையில் அது உயிருடன் இருக்கும். மாதத்தில் இந்த இரண்டு நாள்கள் மட்டும் உடலுறவு கொள்ளாமல் சும்மா இருந்து விட்டால் கவலை இல்லை. கர்ப்பம் உண்டாகாது.

### கரு உண்டாகாத காலம்:-
### (SAFETY PERIOD)

சரி. இந்தக் கருமுட்டை எப்போது கர்ப்பப்பையில் வந்து உயிருடன் இருக்கிறது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அதுதான் கஷ்டம். அதை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. அதனால்தான் பெரும்பாலான பெண்கள் கர்ப்பமடைகிறார்கள்!

ஒரு பெண் கர்ப்பமானதும், உடனே கருமுட்டை ஓடிப் போய்க் கர்ப்பப்பையின் ஓரத்திலே எங்கேயாவது ஒட்டிக் கொள்கிறது. கர்ப்பம் ஏற்பட்டதும், அதற்கு ஆபத்து ஏற்படக் கூடாதே என்று கர்ப்பப்பை, உடனே தன் வாயிலை மூடிக் கொண்டதும் கரு வளரத் தொடங்குகிறது. அப்புறம் எவ்வளவு முயன்றாலும் இந்தக் கருவை எளிதில் கலைக்க முடியாது! ஆபத்து இல்லாமல் அதைக் கலைக்க வேண்டுமானால், திறமை மிக்க, அனுபவம் மிக்க டாக்டர்களின் உதவி தேவை. கருவைக் கலைப்பதான அபார்ஷனை டாக்டர்கள் மட்டுமே செய்ய வேண்டும். வேறு எவரும் செய்யக் கூடாது!

### கர்ப்பமா இல்லையா?

இப்போது இந்தியாவில் அபார்ஷன் செய்து கொள்வது என்பது குற்றமல்ல. சட்டப்படி குற்றம் அல்ல. யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எந்த டாக்டரிடம் வேண்டுமானாலும் அபார்ஷன் செய்து கொள்வது என்பது சட்டப்படி குற்றமாக இருந்தது. அப்போது எவராவது அபார்ஷன் செய்து கொள்ள டாக்டர்களிடம்

போனால் டாக்டர்களில் சிலர் அபார்ஷன் செய்துவிடப் பயந்தார்கள். துணிந்த டாக்டர்கள் மறைமுகமாக, இரகசியமாக அபார்ஷன் செய்து வந்தார்கள். அவர்கள் அதற்காக ஆயிரக்கணக்கில் பணம் வாங்கி வந்தார்கள். அபார்ஷன் செய்தே பல டாக்டர்கள் பெரும் பணமும் பெரும் சொத்தும் சேர்த்துப் பணக்காரர்களாகி விட்டார்கள்!

இப்போது எல்லா டாக்டர்களுமே அபார்ஷன் செய்து விடுவதால் கொஞ்சம் பணம் கொடுத்தால் போதும்!

டாக்டர்கள் எப்போது அபார்ஷன் செய்து விடுகிறார்கள்? விவரம் தெரிந்த டாக்டர்கள், ஒரு பெண்ணுக்கு உடனே அபார்ஷன் செய்து விட மாட்டார்கள். அபார்ஷன் செய்துவிடுவதற்கு முன்னால் உண்மையிலேயே அவளுக்குக் கர்ப்பம்தானா? அவள் கர்ப்பமாக இருக்கிறாளா என்று முதலில் பரிசோதித்துப் பார்ப்பார்கள். கர்ப்பமா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க என்ன வழி?

ஒரு பெண், அவளுக்கு ஒவ்வொரு தடவையும் 30 நாள்களுக்கு ஒரு தடவை ஒழுங்காக மாதவிலக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது; ஒரு தடவை அவளுக்கு 40 நாள்கள் ஆகியும் மாதவிலக்கு ஏற்படவில்லை என்று வைத்துக் கொள்வோம். உடனே அவள், தான் கர்ப்பம் என்று அஞ்சுகிறாள். உடனே டாக்டரிடம் போகிறாள். டாக்டரால் இவளைப் பரிசோதித்துப் பார்த்து அந்த இடத்திலே அப்போதே அவள் கர்ப்பமா இல்லையா என்பதைச் சொல்லிவிட முடியாது. கர்ப்பமா இல்லையா என்பதைக் கண்டு பிடிப்பதற்காகவென்றே சில இன்ஜெக்ஷன்களும் சில மாத்திரைகளும் இருக்கின்றன. டாக்டர் இந்த மாத்திரையையோ, அல்லது இன்ஜெக்ஷனையோ கொடுக்கிறார். அது உண்மையான கர்ப்பம் இல்லை போலிக் கர்ப்பம் என்றால், ஒரு வாரத்திற்குள் மாதவிலக்கு ஏற்பட்டுவிடும். உண்மையிலேயே கர்ப்பம் என்றால் மாதவிலக்கு ஏற்படாது. இந்த இன்ஜெக்ஷனும் இந்த மாத்திரையும் கர்ப்பமா இல்லையா என்பதை அறிய முடிவு செய்ய மட்டுமே உதவும். கர்ப்பத்தைக் கலைக்க இது உதவாது! இது தெரியாமல், டாக்டர் பரிசோதனைக்காக மாத்திரை கொடுத்ததும், அல்லது ஊசி போட்டதும் கர்ப்பத்தைக் கலைப்பதற்காகவே என்று பெண்கள் எண்ணி விடுகிறார்கள். சோகை நோயினாலோ, வேறு

காரணத்தினாலோ அந்தக் கர்ப்பம், போலிக் கர்ப்பமாக இருந்தால் ஊசி போட்ட இரண்டு மூன்று நாள்களிலேயே மாதவிலக்கு ஏற்பட்டுவிடுகிறது. உடனே பெண்கள் அந்த ஊசியினால் தங்கள் கர்ப்பம் கலைந்து விட்டது என்று எண்ணுகிறார்கள். இது தவறு. உண்மையான கர்ப்பமாக இருந்தால், இந்த ஊசி குழந்தை நன்றாக வளர உதவுகிறது! இது அதிசயமில்லையா?

டாக்டர்கள் இந்த ஊசியைப் போட்டுக் கர்ப்பமா இல்லையா என்பதை நன்றாக முடிவு செய்து கர்ப்பம் என்று உறுதியாகிவிட்டால், அதற்குப் பிறகே அபார்ஷன் செய்வதற்குரிய வேலைகளை ஆரம்பிக்கிறார்கள்!

போலி டாக்டர்களும் நாட்டு வைத்தியர்களும் இவ்வளவு கவனத்துடன் இவ்வளவு அக்கறையுடன் இவ்வளவு விழிப்புடன் நடந்து கொள்வதில்லை. கர்ப்பமா இல்லையா என்று சோதனை செய்து பார்க்காமலேயே உடனே அபார்ஷன் செய்யத் தொடங்கி விடுகிறார்கள். இல்லாத ஒரு கர்ப்பத்தைக் கலைக்கும் போது அதனால் எவ்வளவு பெரிய ஆபத்தை அவர்கள் உண்டாக்குகிறார்கள் என்பதை அந்தப் போலி டாக்டர்களும் உணர்வதில்லை!

## அடிக்கடி அபார்ஷன் ஏற்படுவதை தடுக்க என்ன பரிசோதனைகள் செய்யலாம்?:-

அடிக்கடி இயற்கையாகவே ஒரு பெண்ணிற்கு 'அபார்ஷன்' ஏற்படுகின்றபோது அந்தப்பெண்ணை நன்கு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான் 'அபார்ஷன்' எந்த காரணத்தினால் வருகிறது என்பதனை தெரிந்துகொண்டு அதற்கேற்ப சிகிச்சை அளிக்க முடியும்.

முதலில் அந்தப் பெண்ணை நன்கு பரிசோதனை செய்ய வேண்டும். அந்த பரிசோதனையின் மூலம் அந்த பெண்ணிற்கு முன்பு குறிப்பிட்ட பாலின நோய்கள், மலேரியா, டைபாய்டு, வேறு